DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai
CC 589 /2018

Deposition of LW9 examined as PW7
Dt. 01. 08. 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சீனிவாசன் | Caste | : | |
| Father's/Husband's Name | : | குணசேகரன் | Calling | : | |
| Village | : | காட்டுமன்னார்கோயில் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 31 /2023 |

(A1, A2 called absent. Petition u/s 317 crpc filed and allowed)

முதல் விசாரணை

நான் தற்போது மதுரை மருத்துவ கல்லூரியில் மூன்றாம் ஆண்டு முதுநிலை பட்டதாரியாக படித்து வருகிறேன். நான் 16.01.2018 அன்று இரவு 10.15 மணிக்கு அரசு பெரியார் மருத்துவமனை மயிலடுதுறையில் உதவி மருத்துவராக பணிபுரிந்தபோது ராஜமூர்த்தி என்பவரால் சுமார் 55 வயது மிக்க சேகர் த/பெ தங்கராசு வடபாதி தெரு, சேந்தங்குடி, வள்ளாலாகரம் என்பவரை சிகிச்சைக்காகஅழைத்து வந்தார் ராஜமூர்த்தி சேகரை இரவு 9.00 மணியளவில் அவரின் வீட்டின் அருகே அடிப்பட்டு இரத்தம் வந்து கிடந்ததை பார்த்து மருத்துவமனைக்கு அழைத்து வந்ததாக என்னிடம் கூறினார். அவரை நான் பரிசோதித்து பார்த்தபோது அவர் சுயநினைவில் இல்லை. அவருக்கு தலையில் 5x1 செமீ அளவில் கிழிந்த காயம் இருந்தது. இடது புருவத்தில் 3X0.5 செமீ அளவில் கிழிந்த காயம் இருந்தது. அவர் மேல் கிசிச்சைக்காக 17.01.2018 அன்று அரசு திருவாரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு சிகிச்சை அளித்த மருத்துவர் டாக்டர். ராஜசேகர் அவர்களின் பரிந்துரையின் படி இந்த காயம் கொடுங்காயம் என்று அவர் சான்று அளித்துள்ளார். அவர் கொடுத்த பரிந்துரையின் படி அ.சா.3 க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று நான் சான்று அளித்தேன். ( **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று கருத்துரை அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நீங்கள் சிகிச்சை அளிக்கும்போது சேகர் சுயநினைவு இன்றி இருந்தார் என்றால் சரிதான். அவரை அழைத்து வந்தவர் அவருக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்பது பற்றி உங்களிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். சேகர் மது அருந்தி இருந்தாரா என்றால் அது பற்றி குறிப்பிடபடவில்லை. மேற்சொன்ன காயம் சாதாரணமாக குடிபோதையில் தடுமாறி கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் உண்டு. காயத்தின் நிறம், வயது, குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். திருவாரூர் மருத்துவமனையில் மருத்துவர் கொடுத்த கருத்துரையின் அடிப்படையில் கருத்துரை வழங்கியுள்ளீர்கள் என்றால் சரிதான்.